8th November 1965]

செங்காலிபாளையம் பல்வகைக் கூட்டுறவுச் சங்கம்

* 352 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் செங்காலிபாளையம் பல்வகைக் கூட்டுறவுச் சங்கத்தில் ஊழலும் பண விரயமும் செய்யப்பட்டதாக சங்க அலுவலாளர்களின்மீது புகார் ஏதேனும் அண்மையில் வந்ததா?

(இ) அதன்மீது அரசு எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) மேற்படி கூட்டுறவுச் சங்கத்தில் 1963-ல், பத்திரங்களில் கள்ளக் கையெழுத்து போடுதல், வேண்டுமென்றே பொய்க் கணக்கு தாயாரித்தல், நம்பிக்கைத் துரோகம் போன்ற செயல்கள் மூலம் நிதிக் கையாடல் செய்யப்பட்டது.

(இ) இது விஷயமாகப் போலீசார் புலனாய்வு செய்து வருகின்றனர்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் இது போன்று ஊழல்கள் ஏற்படுவதற்குக் காரணம், நிர்வாகத் துறையில் தொடர்ந்து அதிகாரிகள் பல ஆண்டுகள் இருப்பதுதான் என்றும், இடையிலே ஒரு பீரியட் விட, விதியை மாற்றவேண்டும் என்றும் மன்றத்திலேயும் வெளியிலேயும் கோரப்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் பரிசீலித்து, அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : எந்த அளவுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ அந்த அளவுக்குச் சட்டங்கள், விதிகள் மூலம் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : ஸார், இப்படி கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் எல்லாக் காரியங்களிலும் லட்சக்கணக்காக நஷ்டம் ஏற்படுவதனால், இதை மாற்றி அமைத்து வேறு வகையில் ஏதாவது ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : It is too general a question.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஸார், கூட்டுறவு சங்கங்களிலே பொய்க்கையெழுத்து போட்டு பணம் வாங்கி கையாடுகிறார்கள் என்பது நடந்து கொண்டே இருக்கிறது. கம்ப்ளெயிண்ட் வரும்போது, அவர்கள் பணம் கட்டிவிடுகிறார்கள். பிறகு கம்ப்ளெயிண்ட் மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. விட்டு விடுகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களிலேயே அந்தமாதிரி பொய்க்கையெழுத்துப் போட்டுப் பணம் வாங்குவது இருப்பதால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

[8th November 1965

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : ஸார், இவ்விஷயத்தில் யார் யார் பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அப்படி எடுக்கிறோம். பணத்தைக் கட்டிவிட்டால் விட்டுவிடுவது என்பது ஒன்றும் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், இந்த ஊழல் நடைபெற்று கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது. இன்னமும் போலீசார் புலன் விசாரிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், பல வழக்குகள் பற்றிக் குறிப்பிடுவதும், அது விசாரணையில் இருக்கிறது என்பதும், பிறகு என்ன ஆயிற்று என்ற தகவலே இல்லாமல் போவதும் பல வழக்குகளில் இருக்கிறது. ஆறு மாதம் புலன் விசாரணை நடக்கக் காரணம் என்ன என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : ஸார், இது என்னுடைய ஜில்லாவைப் பொறுத்ததுதான். அந்தத் தலைவர் இறந்து விட்டார். அதனால், மறுபடியும் ஜாமீன் போட்டவர்கள் பற்றி விசாரணை செய்து வேண்டிய நடவடிக்கை எடுக்க இவ்விஷயம் இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது. அது மட்டுமல்ல, போலிஸ் ஐ.ஜி. அதற்கு ஒரு தனிக் கூட்டுறவு அதிகாரியைக்கூடப் போடவேண்டும் என்று சொல்லி, அதற்கு வேண்டிய ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. துரிதமாக விசாரணை செய்து வருகிறார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஸார், இந்தக் கூட்டுறவுச் சங்கத்திலே ஏற்பட்ட 'மிஸ்-அப்ரோப்ரியேஷன்' என்று சொல்லுகிறார்களே, அந்தவிதத்தில் எவ்வளவு கையாடப்பட்டிருக்கிறது. கையாடப்பட்ட பணத்தில் இதுவரையில் எவ்வளவு வசூலிக்கப் பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா ?

கனம் திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இதிலே கையாடப்பட்ட ('மிஸ்-அப்ரொப்ரியேஷன்' என்பது) பணம் ரூ. 1,40,000.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கம் நல்ல இயக்கம்தான். ஆனாலும் நல்ல முறையில் இயங்கச் செய்ய இதைச் சற்று மாற்றி அமைக்க அல்லது, சட்ட மன்றத்திலே உள்ள எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் உள்ள ஒரு குழுவாக அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அட்வைசரி கமிட்டி ஒன்று இருக்கிறது. அதிலே சட்ட சபை மெம்பர்களும் இருக்கிறார்கள், கூட்டுறவாளர்களாக, இருப்பவர்கள். ஆகவே, தனியாக ஒரு கமிட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு ஸ்தாபனங்களிலே ஏற்படும் தப்பிதங்களை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தாலும் நிவாரணம் காணவில்லை என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். (குறுக்கீடு) யாராக இருந்தாலும் குற்றம் குற்றமே என்று . . .

8th November 1965]

கனம் சபா நாயகர் : குறிப்பாகச் சொல்லி ஏதாவது கேளுங்கள். 'மக்கள் பேசிக்கொள்ளுகிறார்கள்' என்றால், அதற்கெல்லாம் கனம் அமைச்சர் என்ன பதில் சொல்லுவார்?Is the Hon. Minister going to give any reply? மக்கள் பேசிக்கொள்கிறார்கள்' என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்கள்.

(பதில் இல்லை.)

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், கூட்டுறவுச் சங்கங்களுக்கு நம் அதிகாரிகள் போய் மேலெழுந்தவாரியாகப் பார்த்துவிட்டு வந்து விடுகிறார்கள். ஆகவே, கூட்டுறவு டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் ஒவ்வொரு சங்கத்திற்கும் போய், பாண்ட், பத்திரம், மற்ற தஸ்தாவேஜு இவற்றை தீவிரமாகப் பார்க்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போடுவார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கூட்டுறவுத் துறையே சர்க்கார் அதிகாரிகள் இல்லாமல் நடக்க வேண்டும் என்று கருதுகிறோம். ஆனால், அந்த அளவுக்கு சங்கங்கள் வளரவில்லை. தலைவர்களும், உறுப்பினர்களும் பொறுப்பு எடுத்துச் செய்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்யாததால் அதிகாரிகள் தலையிட வேண்டிய நிலையை ஏற்படுத்தி விடுகிறார்கள். அதற்கு நான் கவலைப்படுகிறேன்.

திரு. ஆ. துரையரசன் : தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கமே நாட்டுயர்வுக்காக ஏற்பட்டது. ஆனால், அது பலருடைய விட்டுயர்வாகி விடுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட ஊழல்களுக்கு காரணமாயிருப்பவர்கள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் அங்கத்தினர் கேட்கும் கேள்வி எனக்குப் புரியவில்லை.

செஞ்சி தாலுகாவிற்கு மாவட்ட முன்சீப் நீதி மன்றம்

* 563 கேள்வி.—**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :**
திரு. கு. கோபால கவுண்டர் : } கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் மாவட்ட முன்சிப் நீதி மன்றத்திற்கு செஞ்சி தாலுகாவிலிருந்து வரும் வழக்குகள், திருக்கோயிலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள முன்சீப் நீதி மன்றங்களுக்கு அடிக்கடி வழக்கமாக மாற்றப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதன் காரணங்கள் யாவை?

(உ) செஞ்சி தாலுகாவைச் சேர்ந்த வழக்காடும் பொதுமக்களின் வசதியை முன்னிட்டு செஞ்சியில் ஒரு மாவட்ட முன்சீப் நீதி மன்றம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) ஆம்.

(இ) கூட்டு மாவட்ட முன்சிப் நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டிய அளவிற்கு அதிகமாக முடிவாகாமல் இருந்த